## ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் நிரந்தர தர்சனத்தின் அவசியம் - 1

## ஆழ்வார்கள், ஆச்சார்யார்கள் வைபவத்தில் ஸ்ரீ ஆதி அத்திகிரீ வரதர்.....

- A) இந்த பெருமாளை மங்களாசாசனம் (**தமிழில் பாடியவர்கள்**)செய்தவர்கள் வரலாறு காலத்திற்கு முற்பட்ட அதாவது முதல் தமிழ்சங்க காலத்தில் அவதரித்த 1) **பூதத்தாழ்வார் (2), பேயாழ்வார் மற்றும் திருமங்கை ஆழ்வார்** என்பதில் இருந்து **இந்த பெருமாளின் பழமை நமக்கு நன்றாக புலனாகிறது.**

- B) ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தின் மிகவும் முக்கியமான ஆச்சார்யார் **ஸ்ரீ ஆளவந்தார்** அவர்களுக்கு **திருக்கச்சி நம்பிகள்** அவர்கள், **பகவத் ஸ்ரீ ராமானுஜ**ரை "**ஆமுதல்வன் இவன்**" என்று அடையாளப்படுத்தியது நமது **ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் சன்னதி**யில்.

- C) **ஸ்ரீ பெரியநம்பிகள் ஸ்ரீ ராமானுஜருக்கு** மதுராந்தகத்தில் பஞ்சசம்ஸ்காரம் செய்வதாலும், **அருளிசெயல்களை ஸ்ரீ ராமானுஜருக்கு பாடம் செய்வித்தது** திருப்புட்குழி மற்றும் நமது ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் சன்னதியில் தான்.

- D) ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தின் முக்கியமான ஆச்சார்யார் **திருக்கச்சி நம்பிகள் பூவிருந்தவல்லி**யில் இருந்து தினமும் நடந்து வந்து **ஆதி அத்திகிரீ வரதர் மூலவருக்கு புஷ்ப கைங்கர்யம்** செய்தார் . அவருடைய கைங்கர்யம் விஷேசத்தால் சந்தோஷம் அடைந்த **ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் அவருடன் தினமும் பேசினார்.** மேலும் அவரை நிரந்தரமாக காஞ்சியிலேயே தங்க செய்து அவருக்கு **ஆளவட்ட (பெருமாளுக்கு விசிறி வீசும் பணி)** கைங்கர்யம் வழங்கியவர் **ஆதி அத்திகிரீ வரதர் மூலவர்.**

- E) ஸ்ரீ ராமானுஜர் **6 கேள்விகளைத்** திருக்கச்சி நம்பி மூலம் ஆதி அத்திகிரீ வரதர் பெருமாளிடம் கேட்க, அவற்றுக்குப் **ஆதி அத்திகிரீ வரதர் அளித்த பதில்கள் தான் ஸ்ரீ ராமானுஜரின் விசிஷ்டாத்வைதத் தத்துவத்துக்கு அடிப்படையாக அமைந்தன.** ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயம் உருவானதில் **ஆதி அத்திகிரீ வரதரின் பதில்கள் தான்** ஆதாரமாகும்.

- F) காஞ்சிபுரம் அருகில் உள்ள **கூரம்** என்னும் ஊரில் பிறந்து, காஞ்சிபுரத்தில் ஸ்ரீ ஆதி அத்திகிரீ வரதர் சன்னதி அருகில் ஒரு இல்லத்தில் வசிந்த **கூரத்தாழ்வார்** தினமும் ததியாராதனை **(அன்னதானம்) கைங்கர்யம்** சிரத்தையுடன் செய்வதை கண்ட **பெரும்தேவி தாயாரும், ஸ்ரீ ஆதி அத்திகிரீ வரதரும் மகிழ்ந்து திருக்கச்சி நம்பிகள்** கேட்கும் வண்ணம் **கூரத்தாழ்வாரை புகழ்ந்து பேசினர்.**

- G) ஸ்ரீ பெரும்புதூரில் அவதரித்த **ராமானுஜர், காஞ்சீபுரத்தில் தங்கி யாதவபிரகாசரிடன் பாடம் படிக்கும் காலத்தில்,** ராமானுஜரிடம் அசூயை கொண்ட **யாதவபிரகாசர்** காசி யாத்திரை என்னும் பெயரில் அழைத்துச் சென்றார். அவ்வாறு செல்லும் வழியில் , ஒரு காட்டில் ராமானுஜரின் **உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த சூழ்நிலை** ஏற்படுத்தினார். இதை அறிந்த ராமானுஜரின் ஒன்று விட்ட சகோதரன் கோவிந்தன் இதை ராமானுஜரிடம் சொல்ல, அந்த **காட்டில் இருந்து தப்பிக்க முயலும் பொழுது ஆதி அத்திகிரீ வரதரும், பெருந்தேவி தாயாரும் ஒரு வேடுவர் மற்றும் அவர் மனைவி உருவில் வந்து அங்கிருந்து ஸ்ரீ ராமானுஜரை காஞ்சிபுரம் வரதர் சன்னதி அருகில் உள்ள சாலைகிணறு அருகே பாதுகாப்பாக விட்டு விட்டு மறைந்து விட்டார்கள். ராமானுஜரை இந்த ஆபத்து காலத்தில் காப்பாற்றியது ஆதி அத்திகிரீ வரதரும், பெருந்தேவி தாயாருமே!**

- H) திருக்கச்சி நம்பிகள் மூலம் ஆதி அத்திகிரீ வரதர் **ஸ்ரீ ராமானுஜருக்கு சாலைகிணற்றில்** இருந்து தினமும் தனக்கு **தீர்த்த** எடுத்து வரும் **கைங்கர்யம்** அருளினார்**.**

- G) திருக்கச்சி நம்பிகள் விஷயமாக தனது மனைவி அபச்சாரம் செய்ததை எற்கமுடியாமல் **ராமானுஜர் சன்யாசம் ஏற்ற இடம் காஞ்சீபுரம் ஆதி அத்திகிரீ வரதர் சன்னதி**யில், மேலும் **பகவத் ஸ்ரீ ராமானுஜருக்கு சன்யாச வஸ்திரத்தை ஆதி அத்திகிரீ வரதரே வழங்கினார்** என்று வைபவம் கூறுகிறது.

- I) தனது கண்பார்வையை இழந்த **கூரத்தாழ்வாருக்கு** மீண்டும் **கண்ணளித்து** ஸ்ரீ ராமானுஜரையும், தன்னையும் **காணச்செய்த** பெருமாள் நமது **ஆதி அத்திகிரீ வரதர் மூலவர்.**

- J) **கூரத்தாழ்வார்** நமது ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் விஷயமாக அருளியது **வரதராஜஸ்தவம்**.

- K) ஆதி அத்திகிரீ வரதர் மீது, **திருக்கச்சி நம்பிகள்** '**தேவராஜ அஷ்டகம்**' என்ற ஸ்தோத்திரத்தை அருளியுள்ளார்.

- L) **ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தேசிகர் 'வரதராஜ பஞ்சஸத்,' 'அர்த்த பஞ்சகம்,' 'மெய்விரத மான்மியம்,' 'திருச்சின்ன மாலை'** ஆகிய ஸ்தோத்திரங்களையும்,

- M) **ஸ்வாமி ஸ்ரீ மணவாள மாமுனிகள் 'தேவராஜ மங்களம்'** என்ற ஸ்தோத்திரத்தையும் இயற்றியிருக்கிறார்கள்.

- N) ஆழ்வார்களின் பாடல்களில் '**கச்சி**' என்ற பெயர் தனியே வந்தால், அது **ஆதி அத்திகிரீ வரதர் கோயிலை** குறிப்பிட்ட தாகவே திவ்யப் பிரபந்தங்களுக்கு வியாக்கியானம் எழுதிய **ஸ்வாமி ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை** நிர்வாகம் செய்துள்ளார்.

- O) **நடாதுர் ஆம்மாள்** என்னும் பக்தரின் பேசிய பெருமாள்.

- P) **ஸ்ரீ ஆதிசங்கரர்** பாஷ்யத்தில் விஷ்ணு ப்ரதிமாந்யாயத்தை சொல்லுவது நமது ஆதி அத்திகிரீ வரதரை தான்.

- Q) **ஸ்ரீ மத்வாச்சாரியார்,** ஆதி அத்திகிரீ வரதரை தரிசனம் செய்துள்ளார்

- R) **ஸ்ரீ புரந்தரதாசர்,** அத்திவரததரை தனது கீர்த்தனத்தில் பாடியுள்ளார்.

**இவ்வாறு ஆழ்வார்கள், ஆச்சார்யார்கள் வைபவத்தில் இரண்டறக் கலந்து இருக்கும் இப்பெருமாளை** ஏதோ ஒரு காலத்தில் பல்வேறு காரணங்களுக்காக அனந்தஸரஸில் ஆதி அத்திகிரீ வரதரை எழுந்தருள செய்துள்ளனர். **இந்த அனந்தஸரஸில் பொதுமக்கள் நீராடுவார்கள், கால் சுத்தம் செய்வார்கள்**. அப்படிப்பட்ட அந்த **குளத்தினுள்** ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு ஆதாரமானவரும், ஆழ்வார்கள், ஆச்சார்யார்களால் கொண்டாடப்படும் **ஸ்ரீ ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் பெருமாளை பகவத் ஸ்ரீ ராமானுஜரின் 1000 வது** திருநட்சத்திரம் **, ஸ்வாமி ஸ்ரீ வேதாந்த தேசிகர்**

**750வது** திருநட்சத்திரம் வைபவமாக கொண்டாடப்படும் இச்சமயத்தில் **மீண்டும் எழுந்தருள செய்வது** எங்களை போன்ற பக்தர்களுக்கும், வைஷ்ணவ பாகவதோத்தமர்களுக்கும் **மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுகிறது.**

மேலும் இந்த கோயில் ஸ்தல வரலாறு, கல்வெட்டு குறிப்புகள் படி இவரே ஆதி மூலவர். இப்படி பல வைபவங்கள் உடைய இவரை தரிசனம் செய்வது நாம் கண்களை பெற்ற பயன். **பிறவியிலேயே கண் பார்வை இழந்த ஒருவருக்கு கண் பார்வை கிடைத்து, அது மீண்டும் இழந்தால் அவருக்கு எப்படி இருக்குமே அப்படி உள்ளது பக்தர்கள் நிலை.**

**கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாள்....நம் கூரத்தாழ்வாருக்கு கண்ணளித்து தன்னைக் காணச்செய்த இந்த பெருமாளை தரிசனம் செய்து கொண்டே இருப்பதுதானே நாம் கண்கள் பெற்ற பயன்.**

ஸ்ரீ ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் பெருமாளை தரிசனம் செய்ய உலகம் முழுவதும் இருந்து ஏராளமான பக்தர்கள் வருடம் முழுவதும் வருகை புரிவார்கள். அதனால் நமது காஞ்சீபுரம் மற்றும் வரதர் கோயில் மேலும் மேலும் புகழ் பெறும்.

நமது நாடும், நமது திருக்கோயிலும் பல பெருமைகள், நன்மைகள் அடைய ஆதி அத்திகிரீ வரதர் மூலவர் தர்சன வைபவம் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்ற பக்தர்கள் **ப்ராத்தனைகளை திருக்கோயில் முக்கியத்தர்கள், திருக்கோயில் அர்ச்சகர்கள், அத்யாபக கோஷ்டியினர், ஸ்ரீ வைஷ்ணவ பெரியோர்கள், இந்து அறநிலையத்துறை, தமிழக அரசு என்று அனைவரும் ஒன்றுபட்டு செவி சாய்த்து பக்தர்களின் பிராத்தனைகளை நிறைவேற்ற வேண்டும்.**